**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKUL**

| | | |
|---|---|---|
| Case number | : | STC 747 OF 2024 |
| Deposition of witness | : | PW–1 |
| Name | : | ஜெயராஜ் |
| Father Name | : | கிறிஸ்டோபர் |
| Age | : | 62 |

**ACCUSED PRESENT.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 11.02.2026.

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை</u>**

6. எங்கள் அலுவலகத்திற்கு எதிரே சரண்யாவும் அவரது கணவரும் கடந்த 04.09.2024 ஆம் தேதி மாலை வேளையில் சமரசம் பேச வந்தார்கள். அந்த சமயத்தில் எங்கள் அலுவலகத்தில் நான் மட்டும்தான் இருந்தேன் வேறு யாரும் இல்லை. எதிரி மற்றும் அவரது கணவர் உடன் வேறு யாரையும் அழைத்து வரவில்லை. எங்களைத் தவிர அன்றைய தினம் அங்கு வேறு யாரும் இல்லை என்றால் சரிதான். நான் சொல்லும் தேதியில் மேற்சொன்னவாறு சமரசம் பேச எதிரியோ, அவரது கணவரோ வரவில்லை என்று சொன்னால் சரியல்ல.

7. என்னிடம் எதிரி பணம் கேட்டபோது எனது மனைவியும் உடன் இருந்தார் என்றால் ஆமாம். இந்த வழக்கில் எனது நிறுவன பங்குதாரரான எனது மனைவியை ஒரு சாட்சியாக விசாரிக்காமல் இருப்பதற்கு ஏதேனும்

தனிப்பட்ட காரணம் உள்ளதா என்றால் இல்லை. நான் உண்மையில் எதிரிக்கு பணம் எதுவும் கொடுக்காத காரணத்தினால் தான் எனது மனைவியை சாட்சியாக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் நான் சொல்லும் விதத்தில் பணம் கொடுத்திருந்தால் எனது மனைவியையும் சாட்சியாக சேர்த்து இருப்பேன் என்று சொன்னால் சரியல்ல.

8. எனக்கு வருமானவரி கட்டுமளவிற்கு வருமானம் இல்லாத காரணத்தினால் வருமானவரி செலுத்துவது இல்லை. எதிரி பார்ட்னர் உடன் சேர்ந்து பைனான்ஸ் தொழில் செய்து வந்தார். எதிரியின் பங்குதாரர் பெயர் தெரியுமா என்றால் உடன் வந்தார் ஆனால் அவரது பெயர் எனக்கு ஞாபகம் வரவில்லை, அவரது பெயர் எனது செல்போனில் உள்ளது, (சாட்சி சற்று நேரம் கழித்து யோசனை செய்து அந்த நபரின் பெயர் ஜெகதீஷ் என்று தெரிவித்தார்). நான் சொல்வது போல் எதிரி யாருடனும் பங்கு கொண்டு பைனான்ஸ் தொழில் செய்யவில்லை என்றாலும் அவர் இல்லதரசியாக மட்டுமே உள்ளார் என்றால் சரியல்ல, நானே பலமுறை அவருடைய அலுவலகத்திற்கு சென்று உள்ளேன்.

9. எதிரியின் பைனான்ஸ் கடையின் முகவரி தெரியுமா என்றால் முகவரி தெரியாது, ஆனால் சென்னிமலையிலிருந்து முகாசி பிடாரியூர் செல்லும் வழியில் இடதுபுறம் செல்போன் ரிப்பேர் கடையாக உள்ளது,

அதிலேயே தான் பைனான்ஸ்–ம் செய்து வந்தார். நான் இந்த விவரங்களை எனது புகாரிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. நான் மேல் சொன்ன தகவல்கள் அனைத்தையும் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

10. எனக்கு கனரா வங்கி, கவுண்டம்பாளையம் கிளையிலும் மற்றும் சிட்டி யூனியன் வங்கி ஊத்துக்குளி கிளையிலும் கணக்கு உள்ளது. 2020–2022 காலகட்டத்திற்கான எனது வங்கி பரிவர்த்தனை பட்டியலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும். தற்போது என்னிடம் காட்டப்படுவது நான் நடத்தி வரும் வி.எம்.எஃப் பைனான்ஸ் அட்டை என்றாலும் அதில் முகப்பில் உள்ளது எதிரியின் புகைப்படம் என்றாலும் சரிதான். என்னுடைய மகளிர் குழுவில் அவர் ஒரு உறுப்பினர் என்றால் சரிதான். அதன்படி நான் கடந்த 26.01.2020 ஆம் தேதி ரூபாய் 50,000/– கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அதில் வாரம் ரூபாய் 750/– விகிதம் 19 வாரங்கள் எதிரி செலுத்தியதற்கான குறிப்புகள் உள்ளது என்றால் சரிதான். அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடைய கையொப்பம் என்றால் சரிதான். **(மேற்படி புத்தகம் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

11. மேற்சொன்ன தேதியில் நான் எதிரிக்கு ரூபாய் 50,000/– கொடுத்த

போது அதற்கு பாதுகாப்புக்காக இந்த வழக்கு காசோலை கையொப்பம் மட்டும் செய்து கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் எதிரியை போல் அட்டையில் பதிவு கொண்டு சுமார் ஆறு, ஏழு பேருக்கு பணம் கொடுத்திருப்பேன். இந்த வழக்கு காசோலை தொகை பெரியதாக உள்ளதாலும், எதிரி பெண் என்பதாலும் எதிரியின் கணவரிடமும் காசோலை வாங்குவது வழக்கம் என்றால் இல்லை, எதிரி மட்டும் தான் எனக்கு காசோலை கொடுத்தார். நான் எதிரியின் கணவரிடம் காசோலை எதுவும் கேட்கவுமில்லை, வாங்கவுமில்லை.

12. நான் மேலே சொன்னது போல் எதிரியின் கணவரிடம் காசோலை எதுவும் வாங்காத காரணத்தினால் தான், 2020 இல் எதிரியிடம் வாங்கிய வெற்று காசோலையை இந்த வழக்கிற்காக நிரப்பி பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புகாரியில் குறிப்பிட்டுள்ள தொகையை நான் எதிரிக்கு கொடுக்காத காரணத்தினால் தான் அவரது கணவரிடம் பாதுகாப்புக்காக எந்த ஒரு காசோலையும் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

13. எதிரியின் கணவர் கம்பெனியில் வேலை செய்கிறார் என்பதை தெரிந்து கொண்டேன் ஆனால் எந்த கம்பெனியில் என்ன வேலையில் உள்ளார் என்பது தெரியாது. எதிரி தற்போது வாடகை வீட்டில் வசித்து வருகிறார். நான் நீதிமன்றத்தில் போதுமான ஆவணங்கள் மற்றும்

சாட்சிகளை சமர்ப்பிக்காத காரணத்தினால் புகாரில் கண்டுள்ள தொகையை கொடுக்கும் அளவிற்கு எனக்கு வசதி வாய்ப்பு கிடையாது என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன காரணங்களுக்காக இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும், தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

B DHARANEETHER Digitally signed by B DHARANEETHER
Date: 2026.02.11 18:17:08 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி